72

முகம்மதலி போராட்டம்

கம்யூனிசம் முட்டாள்களுக்கா?

சுந்தர ராமசாமி பதில்

கொரில்லா யுத்தம்

மணியன் பதில்கள் விமர்சனம்

தமிழ் வேலைக்காரர்களின் மொழியா?

சுடர்

80 காசு மாத இதழ் பிப்ரவரி '87

FREE E - BOOKS , www.thamizham.net.,



புகைப்படம் பழையது. மு.மேத்தா சோழநிலாவிற்குப் பரிசு வாங்குகிறார்.

தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் சார்பில் முதல் பரிசு பெறும் நூல்களை 1000 பிரதிகளிலிருந்து 1500 பிரதிகள் வரை பொது நூலகங்களுக்காக அரசு வாங்கிக் கொள்ளும். இரண்டாம் பரிசு பெறும் நூல்களை 600 பிரதி முதல் 1000 பிரதிகள் வரை வாங்கிக் கொள்ளும்.

—சட்ட, கல்வியமைச்சர் சி. பொன்னையன் 15-01-87.

தரமான நூல்களை நூலகங்களுக்கு வாங்குவதில்லை. வாங்கினாலும் 450 பிரதிகள்தான் வாங்கப்படும். அரசை அனுசரித்துப் போகிறவர்களுக்குத்தான் பரிசுகள் கிடைக்கின்றன. எனவே அவர்களுக்கு இலாபம்தான்.

பாவேந்தர் பாரதிதாசன் விருதுபெற்ற கவிஞர் மு. மேத்தாவுக்கு 4 சவரன் எடையுள்ள பொற்பதக்கமும் ரூ 10 ஆயிரம் ரொக்கமும் வழங்கப்பட்டது.

இடம் : வள்ளுவர் கோட்டம், தினமணி 16 ஜன 87.

...பரிசு வாங்குவதற்கு இவர்கள் படுகிற பரிதாபங்களைப் பார்க்கும் போது பரிசு வாங்காமல் இருப்பதே பரிசுத்தமானது என்று எனக்குப் படுகிறது. நாட்டில் நடமாடும் பரிசுகளும் பதவிகளும் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டு வாங்கிக் கொள்ளும் கேவலமான நிலையில்தான் இருக்கின்றன. இங்கே எந்த ஒரு கலைஞனும் தான் ஒரு கலைஞனாக இருக்கும் நேரத்தைவிடக் காக்காய் பிடிப்பவனாகவே அதிக நேரம் இருக்க வேண்டியிருக்கிறது.

—மு. மேத்தா, கல்கண்டு 16-06-86 பக்: 3

—நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

நமது தலை நகரில்

ஆண்டு	வரதட்சணை சாவுகள்	கற்பழிப்புகள்
1984	30	85
1985	33	83
1986 (அக்டோபர் வரை)	39	72

—டைம்ஸ் ஆப் இந்தியா

பெண்கள் ஆண்களைவி[illegible] [illegible]பாலத்தில் த[illegible]ந்தவர்கள் என்பது உண்மையா?

ஜெசி: உண்மைதான் இங்கு பெரும்பாலும் கூட்டுக்குடும்ப வாழ்க்கையே நிலவிவருகிறது. இவற்றில் பெரும்பாலும் வறுமைக்கோட்டின் கீழே வாழ்பவை. குடும்பத்தலைவன் என்று சொல்லப்படும் ஆண்கள் உணவின் பெரும்பகுதியை 'கைப்பற்றுகிறுர்கள்?'. இந்த அநீதியை 'நியாயப்படுத்த' கணவன் தின்றுபோடும் மீதியை உண்பது மனைவிக்கு மகிழ்ச்சி என்றும் 'உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு' என்றும் மரபு வழியாக சொல்லி வருகிறார்கள். இதற்குப் பெண்கள் இணங்குகின்றனர். அல்லது சகித்துக் கொள்கின்றனர். இதனால் ஒத்த வயதுடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் எடை விஷயத்தில் வித்யாசம் ஏற்படுகின்றது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

நீதி நீதி நீதி நீதி நீதி

இந்தியாவில்...

ஒருவன் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்ட பின்னால் தான் தண்டனை தரப்பட வேண்டும். இந்தியாவில் நிரூபிக்கப்படாமலேயே விசாரணைக் கைதிகள் பல ஆண்டுகள் தண்டனை அனுபவிக்கிறார்கள். 90,000 விசாரணைக் கைதிகள் பல ஆண்டுகள் தண்டனை அனுபவிக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். நீண்ட காலம் விசாரணை இன்றி சிறையில் வைத்திருப்பது இந்தியாவின் நீதி. வழக்குகள் தேங்கி இருப்பதற்கு இதுதான் காரணம்.

ரஷ்யாவில்...

ரஷ்யாவில் வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்ற பேச்சுக்கே இடமில்லை. சிவில், கிரிமினல் வழக்குகள் ஆறு மாதத்திற்குள் பைசல் செய்யப்படுகின்றன. கீழ்க் கோர்ட்டில் 7 நாட்களில் தீர்ப்பு வந்து விடுகின்றது. அப்பீல் செய்யப்படும் வழக்குகள் உயர்நீதிமன்றங்களால் துரிதமாக பைசல் செய்யப்படுகின்றன. தொழில் தகறாருகள், சொத்துரிமை வழக்குகள், விவாகரத்து வழக்குகள் பைசல் ஆகும் காலம் 10 மாதங்கள்.

ருஷ்யாவில் கீழ்கோர்ட் நீதிபதிகளை அந்தப் பிரதேச மக்களே தேர்ந்தெடுக்கின்றனர். உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக் கின்றனர். நீதிபதிகளின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். கொலைக் குற்றத்துக்கு தூக்குதண்டனை. இதர குற்றங் களுக்கு அதிகபட்ச தண்டனை 5 ஆண்டுகள்.

—ஏழையின் குமுறல்

வசை சொல்லும்

மலர்கள்

• எங்கள் காம்புகளை
ஒடிக்கவரும் உங்கள் கைகளிடம்
சொல்லிவையுங்கள்
அவைகள் காம்புகளல்ல
கழுத்துகள் என்று!

— பூங்கணியன

சுட்டி - தொடர்பு முகவரி

AP - 638, H பிளாக் அண்ணா நகர்,
சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

மேடைப் பிரிவு

துக்ளக் சோ

துக்ளக் பத்திரிகையின் 17-வது ஆண்டு நிறைவு விழா. மேடையில் கர்நாடக முதல்வர் வீற்றிருக்கிறார். கூட்டத்தின் முன்னே அமர்ந்திருந்த மக்கள் ஹெக்டே யிடம், 'காவிரி நீர் ஏன் தரவில்லை?' என்று கேட்க அதற்கு கர்நாடக முதல்வர் ஹெக்டே, 'அதைக் கொடுக்க உத்தரவு போட்டு விட்டேன்!' என்றார். பின் விளக்கமும் அளித்தார். ஒரு மாநிலத்து மக்கள் இன்னொரு மாநிலத்து முதல்வரிடம் விளக்கம் கேட்பது அபூர்வமான விஷயம் இல்லையா?

சோ, விழா மேடையில் தன்னுடன் பணிபுரியும் எல்லா ஊழியர்களையும் அறிமுகப்படுத்தியது சிறப்பாக இருந்தது. ஒரு வாசகர் எழுந்து 'நீங்கள் கோமாளித்தன மாகவும், அயோக்கியத்தனமாகவும் அரசியலை வைத்து வியாபாரம் செய்கிறீர்கள்' என்று சோ மீது குற்றம் சுமத்தினார். அதற்கு சோ பதில்: 'கோமாளித்தனமான அரசியலை இயல்பாக எழுதுவது என் கடமை. இந்த நாட்டில் கொஞ்சம் அயோக்கியத்தனம் இருப்பதில் தவறில்லை...?

கூட்டத்திலிருந்து சில துளிகள் :

அருண் ஷோரி : இராமகிருஷ்ண ஹெக்டே பிரதமர் ஆகாததற்குக் காரணம் ராஜீவ் காந்தி அல்ல. ஜனதா தலைவர் சந்திரசேகர் தான் காரணம்.

ஃ கடந்த ஆண்டில் பஞ்சாபில் 1000 பேர் கொலை செய்யப்பட்டனர். சமீபத்தில் ஓடும் பஸ்ஸை நிறுத்தி 23 பேர் கொலை. மினி ஜாலியன்வாலா பாக்! எதிர்கட்சிகள் என்ன செய்தன? பஞ்சாபில் நடந்த கொலைகளுக்கு டெல்லியில் பந்த் நடத்தின. போதாதா?

ஃ எதிர்கட்சிகள் ராஜீவை எதிர்த்துப் போராடுவது முக்கியம். ஆனால் அவர்கள் செய்வது தங்களுக்குள்ளேயே போராடுவது.

ஃ தேர்தலின் போது 'சிறு விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்படும்' — இது எம்.ஜி.ஆரின் தேர்தல்

தொடர்ச்சி 21 ஆம் பக்கம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

முகம்மதலி போராட்டம்

ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற 'காஷியஸ் கிளே' எனும் முகம்மதலி, தனது நண்பன் ரோன்னியுடன் ஒரு ஓட்டலுக்கு சென்றார். அங்கிருந்த பெண் சர்வரிடம் தேவையான உணவு வகைகளுக்கு ஆர்டர் கொடுத்தார். ஆர்டர் எடுத்துச் சென்ற சர்வரை அருகில் அழைத்த ஓட்டல் மானேஜர் அவர் காதில் ஏதோ கிசுகிசுக்க, உடனே முகமதலியிடம் வந்த பெண் சர்வர், "மன்னியுங்கள். உங்களுக்கு இங்கே உணவு கொடுக்க இயலாது" என்றார்.

துணுக்குற்ற முகமதலி, ஒரு நிமிடம் யோசித்தார். பாவம், நான் யாரென்று தெரியாமல்தான் இப்படி சொல்கிறார்கள் என்று நினைத்து அந்த சர்வர் பெண்ணை அழைத்து, "அம்மா, நான் காஷியஸ் கிளே. ஒலிம்பிக் குத்துச்சண்டை வீரர்." என்றார். கழுத்தில் இருந்து 'புகிலேட்டோ' என்று பொறிக்கப்பட்ட தமது பதக்கத்தையும் காண்பித்தார்.

அவரை இனம் கண்டு மகிழ்வு கலந்த அதிர்ச்சியுற்ற அப்பெண் மானேஜரிடம் ஓடி அவருக்காக வாதாடினாள். ஆனால் பயனில்லை. மானேஜர் பிடிவாதமாக 'நீக்ரோக்களுக்கு இங்கே உணவு கிடையாது' என்று மறுத்து விட்டார்.

எ.ஏ. செய்தி- 1

இந்திரா சௌந்திரராஜன், காரியப்பட்டி-626 106.

காவிரி நதிநீர் பிரச்சனையில் கர்நாடக அரசும், தமிழக அரசும் இழுஇழு என்று இழுப்பதைப் பார்த்தால் அடித்துக் கொண்டு அழலாம் போலிருக்கிறது. வாரம் ஒருமுறை செய்தித் தாள்களில் இது தொடர்பான செய்தி தலைக்காட்டும். பிறகு அவ்வளவு தான். பயன் பூஜ்ஜியம்தான். காங்கிரஸ் ஆட்சியிலேயே தலை நீட்டியப் பிரச்சனை கழகங்களின் கடாட்சத்திலும் கரை ஏறமுடியவில்லை. ஹெக்டே என்னவென்றால் இது தமிழகம், கர்நாடகம், பாண்டிச்சேரி பிரச்சனை சம்பந்தபட்டது என்கிறார், பேசவேண்டும் என்கிறார். இதைவிட இவர்களுக்கு என்ன வேலை இருக்கிறது? இந்த மாதிரி விஷயங்களில் ஏன் ஆமையோடு போட்டிப் போடுகிறார்கள்?

FREE E - BOOKS , www.thamizham.net.,

'இந்த அமெரிக்கா வீரர்களின் நாடு. விடுதலை விரும்பிகளின் நாடு. இதனை உங்கள் செய்கையால் களங்கப்படுத்துகிறீர்கள். இங்கு பக்கத்திலுள்ள அரசு பொது மருத்துவமனையில்தான் நான் பிறந்தேன். இங்கேயே பிறந்து இங்கேயே வளர்ந்தவன் நான். ஒலிம்பிக்கில் இந்நாட்டின் புகழை நிலைநாட்டியவன் நான். உங்களுக்கு அந்நியன் அல்ல. எத்தனையோ அந்நிய நாட்டவருக்கு இங்கு உணவு தருகிறீர்கள். ஆனால் ஒரு அமெரிக்க நீக்ரோ பிரஜைக்கு உணவு மறுக்கிறீர்கள். நீங்கள் வெட்கப்பட வேண்டியவர்கள்.'

இப்படியெல்லாம் முகமதலி நினைத்தாரே தவிர வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

அவரது நண்பர் ரோன்னி எழுந்து உரத்த குரலில், ''நண்பர்களே! இவர்தான் ஒலிம்பிக் குத்துச்சண்டை வீரர். தங்கப்பதக்கம் வென்றவர். இத்தாலியிலிருந்து இப்போதுதான் திரும்பியுள்ளார்'' என்றார். ''தங்கப் பதக்கம் பெற்ற உன்னை வைத்து வியாபாரம் செய்ய 'காண்ட்ராக்ட்' எடுத்து ஆறு வருடங்களுக்கு 'புக்' செய்துள்ள 10 கோடீசுவரர்களுக்கு போன் செய். தங்கள் கைக்காசை வைத்து இந்த ஓட்டலையே விலைக்கு வாங்கி விடுவார்கள்'' என்று முகமதலியை டெலிபோன் பூத்திற்குள் தள்ளினார்.

பூத்தில் நுழைந்த முகமதலி டெலிபோன் செய்யாமலேயே வெளி வந்தார். ''உனக்கு என்ன வந்தது?'' ரோன்னி ஆத்திரப்பட்டார்.

ஏ.ஏ.செய்தி: 2

கவிஞர் வண்ணைவளவன் எம்.ஏ., சென்னை-600 021

நாட்டில் ஆயிரமாயிரம் அக்கினி பிரச்சனைகள் இருக்க, விமானக் கடத்தல் நாடகம் அறிவித்தே நடத்தப் பட்டதாம். இதனால் பணமும், மனமும் விரயமானது. எரிச்சலை ஏற்படுத்தாதா?

இந்த விமானக் கடத்தல் நாடகத்தால் எப்படியெல்லாம் செய்தி பரவுகின்றது! விமானக் கடத்தல் தான் நமது நாட்டின் தேசிய நிகழ்ச்சியாகி விட்டதே! இனி, இந்த நாட்டில் பதவியில் இருப்போர் இறந்து போய் விட்டதாகக் கூறி பதவிக்கு எப்படி அடித்துக் கொள்கிறார்கள்? மக்கள் எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள்? - என்று ஆள்வோர் நாடகம் ஆடினாலும் ஆடலாம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

எனக்கு உணவு கிடைக்க என்னை காண்ட்ராக்ட் எடுத்த வெள்ளையரின் அனுமதி வேண்டுமா? தங்கப்பதக்கம் என் சொந்தத் திறமைக்காகத் தரப்பட்டது. இந்த கோடீஸ் வரர்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டதல்ல. அப்படியே ஒரு சமயம் அவர்கள் எனது உதவிக்கு வந்தால்கூட அவர்கள் மூலமாக எல்லா 'வெள்ளையர் மட்டும்' இடங் களுக்கு எனக்கு மட்டும் அனுமதி கிடைக்கலாம். ஆனால் என்னைப் போன்ற பிற கறுப்பர்களுக்கு?'

இவையும் அவரது சிந்தனையில் எழுந்த அலைகள் தான். மௌனமாக இனம் புரியாத வேதனையுடன ஓட்டலை விட்டு வெளியே வந்தார். உள்ளேயிருந்து வெள்ளையர் களின் அட்டகாசமான பரிகாசச் சிரிப்பு அவரை முதுகில் அறைந்தது.

இதற்குப்பின் தன்னைத் துரத்தி வந்த வெள்ளைக் காவலாளிகளிடம் இருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஓடிய அவர் ஒஹியோ ஆற்றின் பாலத்தை அடைந்தார். அங்கு அந்தக் காவாளிகளுடன் நடந்த சிறு சண்டையில் அந்தப் பதக்கத்திலும் ரிப்பன்களிலும் ரத்தக்கறை படிந்து விட்டது. ரோன்னி அதை ஆற்று நீரில் கழுவிய பின் தன் கழுத்தில் அணிந்து அழகு பார்த்துக் கொண்டார்.

உண்ணும் போதும், உறங்கும் போதும், தேய்த்து தங்க மூலாம் அழிந்து உள்ளேயிருந்து ஈயம் எட்டிப் பார்க்கத் தொடங்கி விட்டபோதும் அதைக் கழற்றாத முகமதலி இப்போது தான் முதல் முறையாக அதை கழுத்தை விட்டு எடுத்திருக்கிறார். நண்பனின் கழுத்தில் பதக்கத்தைப் பார்த்த அவர் மனதில் ஓர் எண்ணம் எழுந்தது. 'இந்த சாதாரண ஈயத்தாலான பதக்கத்தையும், ரிப்பன்களையும் வைத்து நான் என்ன செய்யப் போகிறேன்?' இப்படி நினைத்ததும் அவரது வயிற்று வலி நீங்கியது.

ஒஹியோ ஆற்றின் நடுப்பகுதி மிகவும் ஆழமானது நண்பனிடமிருந்து பதக்கத்தை வாங்கி கழுத்திலணிந்த முகமதலி பாலத்தை அடைந்தார். பதக்கத்தை கழற்றி ஆற்றின் நடுப்பகுதியில் வீசியெறிந்தார்.

தன்னை ஒரு மனிதனாக பிறர் மதித்து நடத்த உதவாத அந்த ஒலிம்பிக் மாஜி தங்க பதக்கத்தை எறிந்த பின் அவரது மனமும் உடலும் லேசாயிற்று. — நிலா

திருமணம், சொந்த விவகாரங்கள், உடல் நலப் பிரச்சனைகள், விரிவான ஆலோசனைகள் பெற எழுதவும். ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00

எம். வெங்கட், 27பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600053. ADVT

FREE E - BOOKS , www.thamizham.net.,

நமது காந்த மருத்துவம்



காந்தத் துண்டுகளை உடலின் பல பாகங்களில் வைத்து எந்த நோயையும் குணப்படுத்த முடியும். வெளிநாடுகளில் புற்று நோயையே இச்சிகிச்சை முறை வெற்றிகரமாக குணப்படுத்தி உள்ளது. (ஆதாரம்: இந்து :4-3-84) சோவியத் நாட்டில் இத்துறையில் தீவிர ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இதன்செயல்பாடு எப்படி? நம் உடலுக்குள்ளேயே காந்த வயல் இருக்கிறது. இதயம், மூளை போன்ற உடல் உறுப்புக்களே காந்தத்தைத் தோற்றுவிக்கின்றன. உடலுக்கு வெளியில் நாம் காந்தத் துண்டை வைக்கும்போது உடலுக்குள் இருக்கும் காந்த சக்தி தூண்டப்பட்டு அதனால்—

இரத்தம் எளிதாகபாய்ந்து இரத்த ஓட்டம் சீரடைகிறது; இரத்த உறைவு, அதிகப்படி கால்சியம், கொலஸ்ட்ரால், தமனி சிரைகளில் உள்ள மற்ற அசுத்தங்கள் நிர்மூலமாக்கபடுகின்றன.

அது மட்டுமா? காந்த ஓட்டம் உடலில் ஏற்படும்போது தோன்றும்வெப்பம் வலியையும் வீக்கத்தையும் குறைக்கிறது. எப்படி?

காந்த ஓட்டம் செல்களை புதுப்பித்தல் சீர்திருத்தல் வளர்த்தல் என்பதோடு புதிய சிறந்த இரத்த அணுக்களின் எண்ணிக்கையையும் உயர்த்துகிறது இதனால் சோர்வும் நரம்புத் தளர்ச்சியும் நீங்கி உறுப்புகள் சரியாக இயங்குகின்றன.

வேதகாலத்திலேயே இயற்கை காந்தச் சிகிச்சை முறை இங்கு இருந்து வந்துள்ளது.

காந்தத்தின் தென் துருவத் திற்கு சுயேட்சையாக சக்தியூட்டும்குணம் வெப்ப மேற்படுத்தும் ஆற்றல் இருக்கிறது. வலி, வீக்கம் தொடர்பான அனைத்து நோய்களையும் அது சீராக்குகிறது. அதுபோல வட துருவம் நோய்கிருமிகளை அழிக்கும் குணம் கொண்டுள்ளதால், கிருமிகளால் ஏற்படும் அனைத்துநோய்களையும் அது குணப்படுத்துகிறது.

காந்தத்துண்டுகள் உடலோடு ஒட்டிய நிலையில் தினம் சுமார் 15 நிமிடம் இருந்தால் நோய்களைக் குணப்படுத்தலாம். இச்சிகிச்சைமுறைஉடனடி நிவாரணம் தரக்கூடியது; எளிது. பாதுகாப்பானது; எதிர் விளைவுகளோ வேறு தீமைகளோ செய்யாது. மலிவானது ஒரே காந்தத்தை வீட்டில் உள்ளவர்கள் பல ஆண்டுகள் பயன்படுத்தலாம். நோய் தடுப்பு முறையாகவும் இம் மருத்துவம் உதவும்.

முறையாக இச் சிகிச்சை செய்யவும், நோய்க்குரிய காந்தக் கருவிகளைப் பெறவும் இது தொடர் →

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஐயா கூப்ட்டிங்களாமே...!'' அமைச்சர் முன் மார்பிற்குக் குறுக்கே கைகோர்த்து நின்றார் எம்.எல்.ஏ. வேதாசலம்.

அமைச்சர் அடர்த்தி இல்லாத புருவங்களை அகல விரித்து ''ஆமாங்கணும்... உம்மால எனக்கு ஒரு காரியம் ஆகணும்...!'' என்றார்.

''என்ன?...''

''நாளைக்கு காலையில வடபழனியில, என் தலைமையில் ஒரு கல்யாணம் நடக்குது... அந்த கல்யாணத்திற்கு சரியா நான் வீட்டிலேருந்து ஒன்பதரை மணிக்கு புறப்படறேன்... நீ என்ன செய்யணும்ன்னா உம்மோட ஆளுகள வச்சி, ஒரு பத்துமணி வாக்குல கோடம்பாக்கத்துக்கு முன்னால உள்ள பாலத்தை வெடிகுண்டுகளால தகர்க்கணும்...!''

''ஐயா..?''

''ஆமாங்கணும்... அப்படி செய்துட்டு 'அமைச்சரை கொல்ல எதிர்கட்சி சதி' ன்னு பத்திரிக்கை ரிப்போர்ட் கொடுங்க... அப்பதான் இந்த மண்டு ஜனங்களுக்கு நம்பமேல ஒரு அனுதாபம் கிடைக்கும்..!''

''ஐயா... என்னால இதுக்கு ஒத்துக்க முடியாதுங்க..!'' என்றார் வேதாசலம்.

''ஒய்...வேதாசலம், நீர் எம்.எல்.ஏவா வர நான் எவ்வளவு பாடு பட்டிருப்பேன். அதோட இல்லங்கனும், அந்த பாலத்தை திரும்ப கட்டறதுக்கு உம்மகிட்டவே காண்ட்ராக்ட்க்கு விட்டு ஏற்பாடு பண்றேன்..!''

''ஐயா, என்னை மன்னிக்கணும்... தயவு செஞ்சு வேற ஆள பார்த்துக்குங்க...!'' என்று சொல்லி விட்டு வேதாசலம் வெளியேறினார்.

மந்திரியின் முகத்தில் கோபம் கொப்பளித்தது. உடனே தன் ''பி.ஏ.'' வைக் கூப்பிட்டார்.

''சார்...!'' என்றான் பி.ஏ.

''அந்த வேதாசலம், நம்ப திட்டத்துவகு ஒத்து வரல... நமக்கு தேவை இந்த வேதாசலம் பயலால நம்ப கட்சிக்கும்

பான பிரிவான தகவல் வரியுடன் தொடர்ப
பெறவும் கீழ்க்கண்ட முக கொள்ளலாம்:-
ஆஸ்ட்ரோ மேக்னடிக் கலர் தெரபி சென்டர்
2, முதல் குறுக்கு எஸ் எஸ் ஐ ஏரியா,
ராஜாஜி நகர், நாலாவது பிளாக் பெங்களூர்-560 010
— சித்தன்

 [அடுத்து நமது மசாஜ் மருத்துவம்]

FREE E - BOOKS , www.thamizham.net.,

மேலை நாடுகளில் தடை செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், இந்தியா போன்ற நாடுகளில் எவ்வாறு கவர்ச்சிகரமாக, விளம்பரப் படுத்தப்பட்டு விற்கப்படுகின்றன என்பதற்கு "காம்ப்ளான்" ஓர் உதாரணம்.

சில மாதங்களுக்கு முன் பிரிட்டிஷ்தொலைக்காட்சி "காம்ப்ளான்" யாரும் அருந்தக் கூடாது. விற்பவர்களுக்கு கடும் தண்டனை உண்டு என்று அலறியது சிங்கப்பூரில்

காம்ப்ளான் விற்றால் பறிமுதல் செய்கிறார்கள். குழந்தைகளின் வயிற்றில் காம்ப்ளான் பலவிதமான கோளாறுகளை ஏற்படுத்துகிறது என்பதே தடைக்குக் காரணம்.

இந்தியர்கள் தலையில் எந்த கழிசடைகளையும் கட்டி விடுகிறார்கள்.

அவற்றை விளம்பரப் படுத்தி நம்மீது திணிக்கத் தான் தொலைக்காட்சியும் பத்திரிகைகளும் இருக்கின்றனவே!

—எஸ்.

எனக்கும், இந்த ஜனங்ககிட்டேருந்து ஒரு அனுதாபம் தேவை... அதனால நீ என்ன செய்றன்னா... நம்ம ஆளுகளை வச்சி இந்த வேதாசலம் இராத்திரி மீட்டிங் முடிச்சிட்டு வர்ரப்ப வெட்டி வீழ்த்திடச் சொல்லு..!"

"சரி...சார்...!" என்றவன் அப்படியே செய்தான்.

மறுநாள் பத்திரிக்கை செய்தி—

"ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. வேதாசலம், எதிர்கட்சியை சேர்ந்த குண்டர்களால் வெட்டி கொலை"—என்று விற்பனையாகிக் கொண்டிருந்தது.

—நாகை. பொன்னி

வேல் டைப்பௌண்டரி
புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
எல்லா மொழி அச்செழுத்துக்கள்,
போஸ்டர் எழுத்துக்கள்
எல்லாவித அச்சக உபகரணங்கள்.
38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7. போன்: 27087.

FREE E - BOOKS , www.thamizham.net.,

...தூசுதட்டி வாசித்தவை

—சுபவி

கம்யூனிசம் முட்டாள்களுக்கா?

60 ஆண்டுகளுக்கு முன்னால் வெளிவந்த 'தி இந்துஸ்தான் டைம்ஸ்' நாளிதழை வாசித்த போது ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

ரஷ்ய நாடு, தோழர் இலெனின் தலைமையில் கண்ட மாபெரும் வெற்றி, உலக நாடுகளைச் சந்திக்கத் தூண்டிய நேரம் அது. இந்தியாவிலும், கம்யூனிசச் சிந்தனைகள் பரவத் தொடங்கி இருந்தன.

அஹிம்சையின் மூலமாகவே வெற்றி பெற முடியும் என்பது காந்தியைப் பின்பற்றியோர் ... முட்டாள்களாக்கி விட முடியும் என்று நான் நினைக்கவில்லை.''

நான் கொஞ்சம் அதிர்ந்துபோய் 'கல்' என்பதற்கு வேறு பொருள் இருக்குமா என்று அகராதிகளைப் புரட்டினேன். அகராதிகள் 'GULL' என்றால் 'முட்டாள்' என்றே பொருள் கூறின.

சரி, அடுத்த கேள்விக்குப் போனேன். அங்கும் அதிர்ச்சி காத்திருந்தது. ''போல்ஷ்விக் கொள்கையில் தாங்கள் காணும் குறை என்ன?'' என்று

தமிழகத்தில் பள்ளிகளில் ஆங்கிலம் கட்டாயப்பாடம்! தமிழ் விருப்பப்பாடம்!

'மீனா'
'ப்ரசண்ட் மிஸ்'
'ரோஷ்னா'
'ப்ரசண்ட் மிஸ்'
'மெர்லின்'
'ப்ரசண்ட் மிஸ்'
'புனிதா'
'ப்ரசண்ட் மிஸ்'
'புனிதா, ஆர் யூ நியூ அட்மிஷன்...?'
'எஸ் மிஸ்'

'உனக்கு செகண்ட் லாங்வேஜ் தமிழ் தானே புனிதா?'

'நோ! டமில்...? நோ மிஸ், நோ மிஸ். ஐ ஹேவ் டேக்கன் ப்ரெஞ்ச்'

'இஸ் இட்? இன் வாட் லாங்வேஜ் டு யூ ஸ்பீக் வித் யுவர் பேரண்ட்ஸ்?'

தமிழ் வேலைக்காரர்களின்

FREE E - BOOKS , www.thamizham.net.,

களில் ஒரு சாரார் கருதத் தொடங்கினர். தீவிரமான இளைஞர்கள் ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்டு, புரட்சிகர அமைப்புக்களை உருவாக்கியிருந்தனர்.

மேற்காணும் சூழலில், எல்லாப் பத்திரிகை நிருபர்களும் காந்தியாரைப் பேட்டி கண்டனர். அரசியல், சமூகம், சமயம் முதலான பல துறைகளில் கேள்விகள் கேட்கப்பட்டன. அப்போது ஒரு நிருபர், ''இந்தியாவிலும் போல்ஷ்விக் கருத்துக்கள் பரவுவதை கண்டு தாங்கள் அஞ்சவில்லையா?'' என்று கேட்டார். இதற்குக் காந்தியார் சொன்ன பதில் தான் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர் சொன்ன பதில் இதுதான்:

''இந்திய மக்களை அவ்வளவு எளிதில்

சொல்கிறார், ''நான் இன்னும் அந்த அளவுக்கு அக்கொள்கையை ஆழ்ந்து படிக்கவில்லை.''

ஆழ்ந்து படிக்காத ஒன்றைப் பற்றி, அவசரப்பட்டு விமர்சனம் செய்வது எப்படி?

எனக்குப் புரியவில்லை. புரிந்தவர்கள் எழுதுங்கள்.

(ஆதாரம்: பட்டாபி சிதாராமையா — த ஹிஸ்டரி ஆப் இண்டியன் நேஷனல் காங்கிரஸ், வால்யூம் 1 - பக்கம் 453.)

'இன் இங்கிலீஷ் மிஸ்...?'

'வித் யுவர் கிராண்ட் பேரண்ட்ஸ்?'

'இன் இங்கிலிஸ் ஒன்லி மிஸ்'

'தென் ஹவ் ஸ்பீக்ஸ் இன் டமில் அட் ஹோம்?'

'மை சர்வண்ட் ஸ்பீக்ஸ் இன் டமில்!'

'இஸ் நாட் டமில் யுவர் மதர் டங்?'

'மை மதர் டங் இஸ் டமில் ஒன்லி! பட் அட் ஹோம் ஒன்லி வித் மை சர்வண்ட் ஐ ஸ்பீக் இன் டமில்'

— மத்திய சென்னையில் ஒரு மேல் வர்க்க சி. பி. எஸ். சி. பள்ளியில் காதாரக் கேட்ட நிகழ்ச்சி இது! எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சந்தெங்கும் முழங்குவோம்! தெருவெங்கும் ஆங்கிலம் வளர்ப்போம்.

— நிலா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு-1

க. நா. சுப்பிரமணியனின் 'இலக்கியத்துக்கு ஒரு இயக்கம்'
(சாகித்ய அகாதமி பரிசு பெற்றது)

சமூக சீர்திருத்தம், அரசியல், மத சம்பந்தமான விஷயங்கள் இதுபற்றியெல்லாம் இயக்கங்கள் தோன்றி உருப்பெற்று சில சமயம் நல்லபடியாகவும், சில சமயம் விசித்திரமாகவும் பயன் தந்திருக்கின்றன. தரமான இலக்கியத்துக்காக ஓர் இயக்கம் தோன்ற வேண்டிய காலம் வந்துவிட்டது என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால்படிப்படியாகத் தரம் தேய்ந்து கொண்டே போகும் என்கிற நிலைமைதான்.

நல்ல நூல்களைத் தேர்ந்தெடுக்கும் கோஷ்டி ஒன்று ரசிகர் கோஷ்டி ஒன்று உதயமாக வேண்டும். எங்கு பிரசுரமான நூலானாலும், நல்லதாக இருந்தால் தெரிந்து கொண்டு படித்து, பாராட்டி தமிழ் வளம் செழிக்க வழி செய்துதர ஒரு கோஷ்டி—சிறு சிறு கோஷ்டிகளாக ஊருக்கு ஒன்று—ஏற்பட வேண்டும். இன்று லைப்ரரிகள் தவிர, தனிமனிதர்கள் புத்தகங்கள் வாங்கிப்படிப்ப தில்லை. தேர்ந்தெடுத்துப் படிக்கிற வாசகர்கள் இரண்டாயிரம் மூவாயிரம்பேர் தமிழ்நாட்டில் ஏற்பட்டு விட்டால் போதும்—நிலைமை சீர்திருந்திவிடும்.

காலமும், பணமும் ஏதோ சொல்பம் விரயமானாலும், பாதகமில்லை—நல்ல நூலாக ஒன்றிரண்டு இந்த ஆண்டில் இந்த மாதத்தில் படித்தோம் படித்துப் பாராட்டினோம் என்று இரண்டாயிரம் மூவாயிரம் பேருக்குத் திருப்தி ஏற்படவேண்டும். அப்போது தமிழ்நாட்டில் ஓர் இயக்கம் செயல்படத் தொடங்கிவிடும். படிக்க ஆர்வமுள்ளவர்கள் ஊருக்கு ஒன்பதுபேர் இருந்தால் போதும், அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம், பழக்க வழக்கங்கள், பண்பு போல, இலக்கியம் என்கிற துறையும் நமது வாழ்வில் முக்கியமானது. அதைத் தரத்தில் குறைய விடக்கூடாது என்கிற ஆத்திரம், தார்மீக ஆத்திரம் இரண்டாயிரம் மூவாயிரம் பேருக்கு ஏற்பட வேண்டும்.

மற்ற விஷயங்களில் இருப்பது போன்ற உற்சாகம் இலக்கியத்தில் ஏற்படவேண்டும்.

வெளியிட்டோர்: காவ்யா, 8, சாஸ்திரிநகர் 2-வது க்ராஸ், பெங்களூர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி வாசகர் இயக்கம்: விண்ணப்பங்கள் பரிசிலிக்கப்பட்டு புகைப்படத்தோடுகூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. உறுப்பினர் ஆனவர்கள், உடனடியாக செயலில் இறங்கவேண்டும்-என்னென்ன செயல்கள் செய்யப்பட்டன என்பதுபற்றி உடனுக்குடன் செய்திகள் அனுப்பப்படவேண்டும். புதிய உறுப்பினர்கள் சேர்ப்புப்பற்றி **கவனத்தில்** எடுத்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் அஞ்சலட்டையில் தொடர்பு கொள்ளவும்.

—வாசகர் இயக்க அமைப்பாளர்

சுட்டி சந்தா: 12 இதழ்களை அஞ்சலில் பெற விரைவில் ரூ. 10.00 பணவிடை செய்யுங்கள்.

முன் இதழ்கள்: எண் 1 முதல் 11. 14, 23, 27, 30, 31 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்புங்கள். உடனே தபாலில் வந்து சேரும். 50-வது இதழ் 75 காசு.

சுட்டி இலவசம்: சுட்டியை அறியாத விரும்பி ஏற்கக்கூடிய நண்பர்கள் உறவினர்களின் முகவரிகளை அனுப்புக. உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் **அனுப்பப்படும்.** எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

சுட்டி வரவில்லை: சுட்டி 10 தேதிக்குள் கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் உடனே எழுதுங்கள். **மீண்டும் அனுப்புகிறோம்.** அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. சந்தா எண். குறிப்பிடல் அவசியம்.

ஏதாவது செய்யுங்கள்: புதியவர்களை சந்தாதாரராக்குங்கள். அறியாதவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகளை நியமிக்க உதவுங்கள். 10 இதழ்களை வாங்கி நண்பர்களுக்குள் விலைக்கு விற்பனை செய்யுங்கள். வியாபார ஸ்தாபனங்களோடு தொடர்புவைத்து விளம்பரங்கள் வாங்கித் தாருங்கள்.

> **சுட்டி இலவச நூலகம்:** அனைவருக்கும் பயன்படக்கூடிய வண்ணம் சுட்டி நூலகம் செயல்பட உள்ளது. படிப்புணர்வை பரவலாக்குவதுதான் **அதன் நோக்கம்** எனவே, சமூகஅக்கறையுள்ள அனைவரும் நூலகத்தை வளப்படுத்துங்கள். பலரும் பயன்பட நூல்களை **அனுப்புங்கள்.** நூல்களில் அன்பளிப்பு என்று போட்டு பெயரையும் முகவரியையும் எழுதத் தவறாதீர்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்:

AP. 638 H பிளாக் அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

எமக்கு வந்தவை

சொல்லுறத சொல்லிப்புட்டேன—கவிதைத் தொகுப்பு (ரூ. 6-00) ஜீவபாரதி, கனிமுத்துப் பதிப்பகம், 727, அண்ணா சாலை, சென்னை-600 006.

சோவியத் யூனியன் 12-வது ஐந்தாண்டுத் திட்டம்—லியோனித் தனிலோவ் - வெளியீடு: சோவியத் நாடு பிரசுரங்கள் 115, தியாகராய ரோடு, சென்னை-600 017 விலை, குறிப்பிடப்படவில்லை.

மனவளக் கலைஞன்—மாதஇதழ், 49சி, காந்திஜி ரோடு ஈரோடு-638 002. விலை. குறிப்பிடப்படவில்லை.

மூலரோக நிவாரண மருந்துகள்—(ரூ. 3,00) .கே. எஸ். லட்சுமணன், தமிழ்நாடு பதிப்பகம், 36-3, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை-600 017.

அவள் நினைவாக—கவிதைத் தொகுப்பு (ரூ. 4.00) ஜெயந்தி குமார், 61, பெருமாள் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.

துளி—பல்சுவை மாத இதழ், ஆசிரியர்: கவிஞர் சேலம் பாலன், 32, கண்ணகி வீதி, ஈரோடு-638 001. தனியிதழ் (ரூ. 1.00) ஆண்டுக்கு (ரூ. 12.00) ஆயுள் (ரூ. 175:00).

சிவப்பு மலர்கள்—மரபுப் பாடல்கள் (ரூ. 10.00) கடலூர் மணிமாறன், மணிமேகலைப் பதிப்பகம், சின்ன தாராபுரம்-639 202, கரூர்வட்டம்

வருண சாதி உருவாக்கம்—(கட்டுரை) (ரூ. 6.00), இ. லெ. கி. ஆசான், பூங்குன்றன் பதிப்பகம், 30, திருவேங்கடம் தெரு, வடகோவை, கோவை-64 1002.

குமுறல்

நான் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழித்துறையில் பி. ஏ. இரண்டாமாண்டு பயின்று வருகிறேன். கழகத்திலிருந்து சென்ற ஆண்டு (முதலாண்டு) நடந்த தேர்வுக்கு ஆன மதிப்பெண்களின் பட்டியலே இன்னும் அனுப்பப்படவில்லை. . மேலும், இந்த வருடத் தேர்வுகள் ஏப்ரல் '87-ல் நடைபெற உள்ளன. ஆனால் இந்த வருடத்திற்கான புத்தகங்கள் இன்னும் வந்து சேரவில்லை.

இந்நிலையில் இரண்டாம் ஆண்டுக்கான டியூஷன் பீஸைக் கட்டச்சொல்லி கடிதங்கள் வந்தன. அதற்குப் பின்னாலும் 'உடனே பணம் கட்டவும். இல்லையேல் பெயர் நீக்கப்படும்', என்ற கடிதம் வந்தது.

நானும் சளைக்காமல் பணம் கட்டப்பட்டுவிட்டது, புத்தகங்கள், மதிப்பெண் பட்டியல், வரவில்லை என்று எழுதிக்கொண்டே இருக்கிறேன். பயன் இல்லை. இந்த முறையில் நிர்வாகம் சென்று கொண்டிருந்தால் அஞ்சல் வழிக் கல்வியின் தரம் எப்படி இருக்கும்...?

நா. மருதாசலம்,
கோவை-641016.

ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், அச்சிடுபவர்: எஸ். எம். ரவீந்திரன்; ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005; முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

தமிழ் நாடகத்தின் இன்றைய நிலை

சுந்தர ராமசாமி

நவீனத் தமிழில் நாவல்களும், சிறுகதைகளும், கவிதைகளும், விமர்சனங்களும் வளர்ந்திருக்கும் அளவுக்குக்கூட நாடகக் கலை வளர்ச்சி பெறவில்லை. உலகத் தரத்தைச் சார்ந்த ஒரு நாடகம் தமிழில் இன்று வரையிலும் படைக்கப்படவில்லை. மேடையேற்றப் படவும் இல்லை. தமிழ் மட்டுமே அறிந்த ஒரு வாசகன் உலக நாடகத் தரத்தை இன்று அறிந்து கொள்ள வழியில்லை. ஏனெனில் உன்னத உலக நாடகங்கள் தமிழில் சொல்லும்படி மொழி பெயர்க்கப்படவில்லை. உன்னத நாடகங்களைப் பார்க்கவும் நமக்குச் சந்தர்ப்பம் இல்லை. ஆக நாடகத்தில் உலகத் தரம் என்பது தமிழனுக்கு இன்று வரையிலும் படிக்கவோ, பார்க்கவோ கிடைக்காத புதிராகவே இருந்து வருகிறது.

நாடகம் என்ற பெயரில் சம்பவங்களை வசனங்களாக மாற்றி எழுதி அச்சேற்றப்பட்ட நூல்கள் நிறைய உள்ளன. ஆழமோ, கலை உணர்வோ, வாழ்க்கைபற்றிய கவலையோ அற்ற பிண்டங்களில் சில ஜென்மங்கள் மாறி மாறிப் பேசிக்கொள்வதால் மட்டுமே அவை நாடகங்கள் ஆகி விடா. தமிழில் ஆரம்பகால நாடகங்கள் இசை, காட்சி ஜோடனைகள், தந்திரக் காட்சிகள், வண்ண ஒளிகள், குட்டி சர்க்கஸ் ஆகியவற்றை நம்பிய தொழில் நாடகங்கள் ஆகும். இவற்றின் உள்ளடக்கங்கள் புராண மரபைச் சார்ந்தவை. அல்லது ராஜா ராணிக் கதை மரபைச் சார்ந்தவை. ஜனங்களின் பக்தி உணர்வுகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் தீனி போடுபவை. பார்வையாளர்களுக்கு இசை விருந்துகள் அளித்து, ஆடம்பரக் காட்சிகளில் அவர்களை ஆச்சிரியத்தில் ஆழ்த்தி, அவர்கள் அறிந்திருக்கும் புராண ராஜா ராணிக் கதைகளை ஒரு கேள்வியோ விமர்சனமோ இல்லாமல் நிகழ்த்திக் காட்டுவது நாடகம் ஆகாது. நாடகம் அல்லாத கலைகளுடையவும் ஏனைய சில்லறைக் கலைகளுடையவும் கூட்டுத்தொகை அல்ல நாடகம். நாடகம் ஒரு தனியான கலை. தனிப்பெரும் கலை. அதற்கே உரித்தான அழகுகளும் ஆழங்களும் கொண்டது.

→

FREE E - BOOKS , www.thamizham.net.,

கவிதைபோல் நாடகமும் இறுக்கமான வடிவம் கொண்டது. மையத்தில் வாழ்க்கைப் பிரச்சினை ஒன்றை வைத்து கலைப்பூர்வமாக ஆராய்வது. பார்வையாளர்களுக்கு ஆழ்ந்த அனுபவங்களைத் தரக்கூடியது. மிகப் பெரிய மன எழுச்சிக்கு அவர்களை ஆளாக்கக் கூடியது. பார்வையாளர்கள் மனதில் இவ்வெழுச்சியை கலைபூர்வமாகத் தனித்து வாழ்க்கையைப் பற்றிய ஆழ்ந்த விசாரணைகளிலும், விமர்சனங்களிலும், கூரான கேள்விகளிலும் அவர்களை ஆழ்த்தக் கூடியது. உலக அரங்கில் கிரேக்க நாடகங்கள் மிக உன்னதமானவை. இப்சன், ஆகஸ்டு ஸ்ட்ரின்பெர்க், அந்தோன் செக்க், யூகின் ஓ நீல் போன்றவர்கள் உலக நாடகக் கலையின் உலகச் சிகரங்களை நிறுவியவர்கள். இப்படைப்புக்கள் நம்மை ஆழமாக பாதித்ததற்கான அடையாளங்கள் இன்று வரையிலும் சொல்லும்படி இல்லை.

உலக அரங்கை விட்டு இந்திய அரங்கை கணக்கில் எடுத்துக்கொள்ளும்போதும் நம் முயற்சிகள் திருப்தி அளிப்பனவாக இல்லை. வங்காளி, இந்தி, மராட்டி, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் தரமான நாடகங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன; மேடையேற்றங்களும் நிகழ்ந்திருக்கின்றன. நவீன நாடகத்தை வளர்க்கும் →

எ.ஏ. செய்தி: 3

ஆர்.எம். சொக்கலிங்கம், துணைத்தலைவர், கதிர்வேடு ஊராட்சி மன்றம், சென்னை-600 066.

"விடுதலைப் புலிகளை கடுமையாகத் தாக்குகிறோம். தங்கள் உறுப்பினர்களை அடைத்து வைத்துள்ளதாகப் இ.பி.ஆர்.எல்.எப். புகார்." பொருளாதார முற்றுகையால், அன்றாடத் தேவைகளைக் கூடப் பெறமுடியாமல் ஈழமக்கள் இன்னல்களை அனுபவிக்கின்றனர். அவர்கள் துயரத்தைத் துடைக்க வேண்டிய தமிழீழ இயக்கங்கள் ஒன்று படவேண்டும்.

எ.ஏ. செய்தி: 4

வி.ஆர்.எஸ்.சுப்பராயன், வாழப்பாடி-636 115

மத்திய அரசோ அல்லது மாநில அரசோ சந்தேகப்படும்படியான தபால்களையோ அல்லது பார்சல்களையோ சோதித்துப் பார்க்க பாராளுமன்றமும், மேல்சபையும் நிறைவேற்றிய தீர்மானம் வரவேற்கப்பட வேண்டிய விஷயம். இந்தத் தீர்மானதிற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்காமல் திருப்பி அனுப்பியது எரிச்சலைத் தந்தது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

முறையில் இன்றும் அங்கு தீவிரமான இயக்கங்கள் உள்ளன. தொழில் நாடகங்களின் ஆபாசங்களை வெறுத்து, நவீன நாடகங்களில் வாழ்க்கைப் பிரச்சினைகளின் கலை ஆக்கங்களைப் பார்க்கும் பார்வையாளர்கள் நவீன நாடக இயக்கங்களுக்குப் பின்னால் அங்கு பெரும் சக்தியாகத் திரண்டு கொண்டிருக்கின்றனர்.

தமிழில் பார்வையாளர்களின் ஆமோதிப்பைப் பெறுவது சபா நாடகங்கள் தாம். மேலோட்டமான, கிளுகிளுப்பை உருவாக்கும் மூன்றாந்தர அவலங்கள் இவை. ஜோக்குகளின் தொகுப்பு. இருபொருள் வசனங்களில் வாழ்க்கையைப் பற்றிய கனவுகளைப் பேணும் கீழான நோக்கங்கள் கொண்டவை. இவற்றைப் பார்த்து இளித்துக் கொண்டிருக்கும் மத்தியதர வர்க்கம்தான் நம் இன்றைய நாடகப் பார்வையாளர்கள்.

மேலான நாடகத்தை எழுப்பும் வகையில் இங்கும் ஒரு சில முயற்சிகள் நடந்துள்ளன. இந்திரா பார்த்தசாரதி, ந. முத்துசாமி, டாக்டர் மு. இராமசுவாமி, பிரபஞ்சன், ஞானராஜசேகரன், ஞாநி ஆகியோர் எழுதியுள்ள நாடகங்களையும், வெங்கட் சாமிநாதன் நாடகம் பற்றி எழுதியுள்ள கட்டுரைகளையும் வாசகர்கள் அவசியம் படித்துப் பார்க்க வேண்டும். தஞ்சைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் செ. ராமானுஜம் நவீன நாடக இயக்கத்தைத் தமிழில் உருவாக்கும் வகையில் கடும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். தரமான வாசகர்களும், பார்வையாளர்களும் தமிழிலும் நவீன நாடக இயக்கத்தை உருவாக்க ஆதரவு அளிக்க வேண்டும்.

31—12—86.

அன்பு அம்மா! இந்த
ஆண்டில் நான் எழுதும்
கடைசிக் கடிதம் இது!
உனக்கு எழுதும் செலவில்
நானே நேரில்
வந்து விடுவேன்!

இப்படிக்கு
தபால் கட்டண உயர்விற்கு
வருந்தும்

சோலை இசைக்குயில்

அம்மா,
தபால் நிலையம் எதிரில்,
பட்டுவாடா
அஞ்சலூர்
பின் PIN 000000

FREE E - BOOKS , www.thamizham.net.,

இந்தி படிப்பதுதான் தேசபக்திக்கு அடையாளம் என்றால் அப்படிப்பட்ட தேசபக்தி நமக்குத் தேவையில்லை. — இரணியல் கலை, சென்னை-57

ஜெ.பி.யின் சீடர் கட்டுரை கண்டேன்! ஜனதா கட்சி தேய்ந்து போனதற்கான காரணம் என்ன என்பதைப் பூரணமாகப் புறிந்துகொண்டேன் —பி. எல். பரமசிவம் மதுரை-1

இந்தியா என்று ஒரு நாடு இருப்பினும் இந்தியர்கள் என்று ஓர் இனமும் இல்லை. தேசிய இனங்களின் தனிப்பட்ட பிரச்சனைகளை எந்த அரசும் புரிந்துகொள்ள முயலவில்லை. அதன் விளைவுதான் காலிஸ்தான் பிரச்சனை. மேற்கண்ட சிந்தனை 'தூசிதட்டி வாசித்தவை'யை வாசித்ததால் ஏற்பட்டது. —தூயவன் பெலகோல்-571 606.

செய்திகளைவிட படங்கள் மிகச்சிறப்பாக அமைந்துவிடும் ஆந்திர முதல்வரிடம் என்.ஜி.ஒ. பிரதிநிதிகள் கை' எடுத்துக்கும்பிடும் காட்சி இவ்வகையைச் சேர்ந்தது —திருமதி சுகுணா மதுரைமூர்த்தி—625 001.

பேரா. அ. மார்க்சின் கருத்துக்கள் ஆணித்தனமானவை. சுந்தரராமசாமி, எம். வி. வெங்கட்ராம் ஆகியோரின் கருத்துக்கள் பயனுடையவை. —அலங்கையோன்

கார்டுன் (கஷ்டப்பட்டு புரிந்து கொள்ள வேண்டியிருந்தது.) திரைப்படக் கவிஞர்களின் நிலையை அப்படியே பிரதிபலித்தது. (வைரமுத்துவுக்கு ஒரு பிரதி அனுப்புங்கள்)—இளந்தீபன் சுந்தரபெருமாள் கோயில்.

கே: சுட்டி இதழ் உங்கள் பதில்களைக் கேலி செய்திருக்கிறதே!

ப: கடலுக்குள் தள்ளிவிட்டால் முத்துக்களுடன் வெளியே வருவேன். என்னைத் தாக்கும் விமர்சனங்கள் எனக்கு யோசனைகளே! நானே அறிந்துவைத்திராத என் பலவீனத்தை சுட்டிக் காட்டியதில் மகிழ்ச்சி, வரவேற்கிறேன்.

—ஜூனியர் பதில்கள், கல்கண்டு 15-01-87 பக். 37

FREE E - BOOKS , www.thamizham.net.,

5-ஆம் பக்கத் தொடர்ச்சி.

வாக்குறுதி. இதைக் கேட்ட கருணாநிதி எம். ஜி. ஆருக்கு சளைத்தவரல்ல என்பது போல் வாக்குறுதி வழங்கினார். 'நான் ஆட்சிக்கு வந்தால் பெரிய விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும்.' ஏற்கெனவே மின் வாரியம் 200 கோடி நஷ்டத்தில் இருக்கிறது!

சோ: எம். ஜி. ஆர். — கருணாநிதி இவர்களின் விரோதமும், குரோதமும் தமிழகத்தில் பெரிய சேதத்தை விளைவித்திருக்கிறது. இது புயல் வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தை விட அதிகம்.

ஃ முன்பு தி. மு. க. — அ. தி. மு. க. சண்டையில் சோடா புட்டிகளும், சைக்கிள் செயின்களும் தான் ஆயுதம். இப்போது குண்டுகள் ஆயுதங்களாகியுள்ளன. இது இலங்கைப் போராளிகளை தமிழகத்தில் வளரவிட்டதால் தான்...

ஃ காந்தி இப்போதிருந்தால் திரும்பத்திரும்ப அகிம்சையைப் பற்றி பேசுவார். அவரை பத்திரிகைகள் புறக்கணித்திருக்கும். லெட்டர்ஸ் டு த எடிட்டர் பகுதியில் அவர் கருத்துக்கள் வெளிவந்தாலே பெரிய விஷயமாக இருக்கும்.

இராமகிருஷ்ண ஹெக்டே: என்னுடைய கர்நாடக அரசு சமீபத்தில் ஓர் உத்தரவு பிறப்பித்தது. பத்திரிகைகளில் வரும் ஆசிரியர் கடிதங்களைப் படித்து உடனே நடவடிக்கை (ஒரு வாரத்துக்குள்) எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அது.

தொகுப்பு: பாரத் ரவுஸ்

கொரில்லா

மாவோ:

கொரில்லா போராட்டம் தனித்துவமான தன்மைகளையும், நோக்குகளையும் தன்னகத்தே கொண்டது. வலிமைக் குறைந்த ஒரு தேசம் ஆயுத பலத்தால் வலிமை கூடிய ஒரு தேசத்துக்கு எதிராக பிரயோகிக்கும் ஆயுதம் தான் இப்போர் முறை. அரசியல் இலக்கற்ற கொரில்லாப் போராட்டம் தோல்வியையே தழுவும். மக்களின் அநுதாபத்தையும், ஒத்துழைப்பையும், உதவிகளையும் அந்நியப் படுத்தி ஒரு கொரில்லாப் போராட்டத்தை ஒரு போதும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. கட்டுக்கோப்பு அற்ற கொரில்லா போராட்டம் வெற்றியீட்டாது.

யுத்தம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

முன் குறிப்பு : தற்போது இதயம் பேசுகிறது இதழில் வரும் 'ரசிகன் பதில்'களைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வில்லை.

இதயம் பேசுகிறது மணியன் பதில்கள்

வலது கையில் அ.தி.மு.க. கொடி. இடது கரத்தில் இந்திரா காங்கிரஸ் கொடி. இது தவிர மு. கருணாநிதிக்குக் கறுப்புக்கொடி, தன்னைத் தீவிரமாக எதிர்ப்பவர்களுக்கு (சமாதான) வெள்ளைக் கொடி. இந்தியாவை 'ஞானபூமி'யாக்க முயல காவிக் கொடி.

—இவர்தான் மணியன். மணியன் அவர்களை விமர்சிப்பதும் பதில்களை விமர்சிப்பதும் ஒன்றுதான். பல ஆண்டுகளாகவே எம்.ஜி.ஆருக்கு வெண்கல ஜால்ராவாக விளங்குபவர். அதன்மூலம் சலுகைகளைப் பெற்றுக் கொண்டவர். பெரும்புள்ளிகளோடு தொடர்புள்ளவர். நிரம்பிய அனுபவசாலி. ஆனந்த விகடன் செலவில் உலகின் பலபகுதிகளைப் பார்த்தவர். பல்வேறுபட்ட உலக மக்களின் கலாச்சாரங்களை மேலோட்டமாக எழுதியவர்.

இத்தனை வாய்ப்பும், வசதியும், சூழ்நிலையும் இருந்தும் ஆழமற்றவராக இருப்பது உலகின் இன்னொரு அதிசயம். இவரது பதில்களைப் படிக்கும்போது ஏதோ கடமைக்காக பதில் சொல்வதைப்போல இருக்கிறது. (ஆதாரம் : கணக்கிலடங்காதவை)

'மணியன் பதில்கள்' என்று போட்டு அதன் கீழே அவரது புகைப்படமும் வெளிவரும். ஆனால்... சில கேள்விகளுக்கு பதில் கூறும்போது 'இது என் சொந்தக்' கருத்து' என்று எழுதுவார். அப்படியொன்றால் மற்றவை யார் எழுதியது?

இவரைப் பற்றி மேலும் அறிய துக்ளக் 01-03-79 இதழில் வெளிவந்த பேட்டியை சுருக்கித் தொகுத்துத் தருகிறேன்:
''பத்திரிகை ஒரு வித பிஸ்னஸ்தான். எனக்குத் தரமான கதை எழுதத் தெரியாது. கீழ் வகுப்பைப்பற்றி எனக்குத் தெரியாது. நடுத்தர, உயர்தர மக்களைப் பற்றிதான் எழுதுவேன். என்கதை இலக்கியம் இல்லை. மணியன் பார்முலா என்று ஒன்று வைத்திருக்கிறேன். திருக்குறளோ அல்லது வேறு எதுவோ போட்டு அதன் கீழே விளக்கம், ஒரு போட்டோவில் அத்தியாய எண் ஒரு சஸ்பென்ஸ் இவை இருக்கும்.''

உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன் : மணியன் பதில்களின் பார்முலா எப்படியிருக்கும்? — தா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு-2

பாரதிதாசன் விருது பெற்ற மு. மேத்தாவின் 'பக்கம் பார்த்துப் பேசுகிறேன்'

''போய் வருகிறேன்.'' என்றது பூ. செல்லமாகத் தட்டிக் கொடுத்தது செடி. தோட்டக்காரன் தொலைவில் வந்து கொண்டிருந்தான்.

''கோயிலுக்குப் போகிறேனா? கூந்தலுக்குப் போகிறேனா?'' பூ மீண்டும் புலம்பியது—செடி ஆறுதல் சொன்னது. ''எங்கு போனால் என்ன? மயானத்தில் தூவப்பட்டாலும் மலர் எப்போதும் மலர்தானே! உன்னுடைய மரியாதை உன்னை விட்டுப் போகாது கவலைப்படாதே... வாழ்க்கை என்பது பதில்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பதல்ல!''

மலர் மௌனமாக இருநதது.

''மகிழ்ச்சியாக இரு - மறுபடியும் சந்திப்போம்.''

''மறுபடியுமா? நானெப்படி மறுபடியும் உன்னிடம் வரமுடியும்?'' என்றது மலர், செடி சிரித்தது.

''நீ நீயாகவே வரவேண்டும் என்பதில்லை. உனக்கு பதிலாக இன்னொரு பூ!. நீ உதிர்ந்த இடத்தில் மற்றொரு மலர். நீ பறிக்கப்படலாம் ஆனால் உன்னுடைய நினைவுகள் ஜனித்துக் கொண்டே இருக்கும். நீ உதிர்ந்து போகலாம்—ஆனால் உன்னுடைய சகோதரர்கள் முளைத்துக் கொண்டே இருப்பார்கள்...!''

வெளியீடு: திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயண ரோடு, சென்னை-17.

17-01-87 அன்றைய செய்தித்தாள்களில் எரிச்சல் ஏற்படுத்திய செய்தி- 5

நம். சீனிவாசன், எம். ஏ. எம். பில்., வலங்கைமான்.

ஜல்லிக்கட்டு காளைகள் தாக்கி 14 பேர் காயம், மூவர் கவலைக் கிடம். மண்டிக் கிடக்கின்ற அநீதிகளை எதிர்த்துப் போராடுகின்ற இளைஞர்கள், அநீதிகளை எதிர்த்துப் போராட வேண்டும். துணிவுற்ற இளைஞர்கள் மாடுகளை அடக்குவதிலேயே காலம் கழிக்கின்றனர். ஜல்லிக்கட்டு வீரவிளையாட்டல்ல. காட்டுமிராண்டித்தனம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS(N)/317

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்



SAKTHI SUGARS LIMITED

A PACE SETTER

for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiarey sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

FREE E - BOOKS , www.thamizham.net.,